செ.வெ.எண்:14/மே/2019 நாள்:13.05.2019

**திருச்சிராப்பள்ளி மண்ணச்சநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற தொடுவானம், பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்று JEE (Joint Entrance Exam) (Main) போட்டித் தேர்வில் வெற்றி பெற்ற மாணவி ஜி.சர்மிளா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்களிடம் இன்று (13.05.2019) வாழ்த்து பெற்றார்.**

---

தமிழக அரசு கடந்த கல்வியாண்டு முதல் 413 மையங்களில் போட்டித் தேர்வுகளுக்காக பயிற்சியினை தொடுவானம் என்ற நிகழ்ச்சியின் மூலம் பயிற்சி அளித்து வருகிறது. நமது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புனித வளனார் கல்லூரி மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், பிஷப் ஹீப்பர் மேல்நிலைப்பள்ளி, அயிலாப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, எட்டரை அரசு மேல்நிலைப்பள்ளி, சோமரசம்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, வையம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, மணப்பாறை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, துவரங்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, துறையூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்ணச்சநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்ணச்சநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புள்ளம்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி, பெருவளப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி, முசிறி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, தொட்டியம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய 16 இடங்களில் தொடுவானம் மையங்கள் செயல்பட்டு வருகிறது. அவற்றில் ஒன்று மண்ணச்சநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியில் உண்டு உறைவிடப் பயிற்சி முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மண்ணச்சநல்லூரில் பயின்ற ஜி.சர்மிளா என்ற மாணவி பொறியியல் துறையில் சாதிக்க வேண்டும் என்று ஆர்வத்தோடு JEE (Joint Entrance Exam) தேர்விற்கு தன்னை தயார்ப்படுத்தி கொண்டார். இம்மாணவி அரசு பள்ளியினுடைய ஆசிரியர்கள், தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட தொடுவானம் பயிற்சி மையத்தில் கலந்து கொண்டு JEE (Main) தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். மேலும் அடுத்த நிலையான JEE (Advance) தேர்விற்கு தன்னை தயார்படுத்தி வருகிறார். இத்தேர்விலும் வெற்றி பெற்றால் IIT, MIT போன்ற தொழில்நுட்ப கல்லூரியில் சேர்வதற்கு தகுதியுடையவராவார்.

மாணவி ஜி.சர்மிளா முயற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்து ஊக்கப்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.இராமகிருட்டினன், மண்ணச்சநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி.ஞானஜோதி மற்றும் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:**

13/5/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**